# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

## 2024/2025

# தமிழ்

## ஆண்டு 11

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: சனிக்கிழமை

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 16

சுட்டெண் :

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3 4

1. செம்மொழிக்கான தகுதிகளின் எண்ணிக்கை
    1. பத்தொன்பது
    2. பதினொன்று
    3. எட்டு
    4. ஒன்பது

2. ‘செந்தமிழ்ச் செல்வர்’ எனப் போற்றப்படுபவர்
    1. மறைமலையடிகள்
    2. திருவள்ளுவர்
    3. தொல்காப்பியர்
    4. தேவநேயப்பாவாணர்

3. வல்லின எழுத்துகளது இனவெழுத்துகள்
    1. இடையின எழுத்துகள்
    2. உயிர்க்குறில் எழுத்துகள்
    3. மெல்லின எழுத்துகள்
    4. உயிர் நெடில் எழுத்துகள்

4. சின்னஞ்சிறு குழந்தைகள் சலசல என ஓடிய நீரோடையில் விளையாடினர். இதில் அடுக்கிடுக்குத்தொடர்
    1. சலசல
    2. சின்னஞ்சிறு
    3. சிறியசிறிய
    4. நீரோடை

5. காற்றுள்ள போதே தூற்றிக்கொள். இதில் வந்துள்ள தோன்றா எழுவாய்
    1. நான்
    2. நாம்
    3. நீ
    4. நீங்கள்

6. எண்ணூறு என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. எண் + நூறு
    2. எட்டு + நூறு
    3. எண் + ணூறு
    4. எண்ணு + நூறு

7. பாணன் என்பதன் எதிர்ப்பாற்சொல்
    1. பாணி
    2. பாடினி
    3. பாணள்
    4. பாணத்தி

8. ‘ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு’. இதில் வந்துள்ள உரிச்சொல்
    1. ஓடு
    2. மீன்
    3. உறு
    4. வாடி

9. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளையும் கொண்டிருப்பவை
   1. நாட்டாரிலக்கியங்கள்
   2. சிற்றிலக்கியங்கள்
   3. பேரிலக்கியங்கள்
   4. பக்தியிலக்கியங்கள்

10. அகச்சுட்டுக்கு எடுத்துக்காட்டாக அமைவது
   1. அவன்
   2. இவ்வீடு
   3. உந்தச்சட்டை
   4. அதனால்

11. திராவிட மொழிக்குடும்பம் உருவாவதற்கு மூலமாக அமைந்த மொழி
   1. தெலுங்கு
   2. மலையாளம்
   3. தமிழ்
   4. கன்னடம்

12. புருவவில் என்பது
   1. உவமையணி
   2. உருவக அணி
   3. தற்குறிப்பேற்ற அணி
   4. உயர்வுநவிற்சி அணி

13. ஒரு சொல்லியத்தில் கருத்து எழும் இடம்
   1. எழுவாய்
   2. செயப்படுபொருள்
   3. பயனிலை
   4. அடைமொழி

14. குற்றியலுகரம் பெற்று வந்த சொல்
   1. படு
   2. நிறு
   3. கதவு
   4. பாக்கு

15. பெருமை + அறிவு என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. பெரியறிவு
   2. பேரறிவு
   3. பெருமைஅறிவு
   4. பெருமையறிவு

16. நாயக்கர் கால சிறந்த இசுலாமியக் காப்பியம்
   1. நெஞ்சுவிடு தூது
   2. திருப்புகழ்
   3. சிவஞானபோதம்
   4. சீறாப்புராணம்

17. அறிவற்றவர் தொடர்பு துன்பத்தினைக் கொண்டு வரும் என்பதை விளக்கும் பழமொழி
   1. கெடுவான் கேடு நினைப்பான்
   2. அற்ப ஆசை கோடி தரித்திரம்
   3. மூடர் உறவால் கேடு வரும்
   4. துட்டரைக் கண்டால் தூர விலகு

18. களிப்பு, உவகை, இன்பம் போன்ற பொருள்களைக் குறிக்கும் சொல்
   1. துன்பம்
   2. அன்பு
   3. பற்று
   4. மகிழ்ச்சி

19. இளையோர் சூடார். இச்சொல்லியம்
   1. உடன்பாடு
   2. எதிர்மறை
   3. தன்வினை
   4. பிறவினை

20. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் தொகைநூல்களாகத் தொகுக்கப்பட்டவை
   1. சங்ககால இலக்கியங்கள்
   2. சங்கமருவியகால இலக்கியங்கள்
   3. பல்லவர்கால இலக்கியங்கள்
   4. சோழர்கால இலக்கியங்கள்

21. மொழியியல் வல்லுநர்களின் மொழிக்கோட்பாடுகள் பலவற்றுக்கு விளக்கமாக அமைந்துள்ள தமிழிலக்கண நூல்
   1. தொல்காப்பியம்
   2. நன்னூல்
   3. வீரசோழியம்
   4. சிலப்பதிகாரம்

22. ‘நட’ என்ற வினையடியின் ஆண்பால் வினைமுற்று, வினையெச்ச வடிவங்கள்
   1. நடந்தாள், நடந்த
   2. நடந்தனன், நடக்கும்
   3. நடந்து, நடந்த
   4. நடந்தான், நடந்து

23. தமிழ்மொழியைச் செம்மொழியென முதலில் கூறிய வெளிநாட்டு அறிஞர்
   1. வீரமாமுனிவர்
   2. இராபர்ட் கால்டுவெல்
   3. யி.யு. போப்
   4. டாக்டர் எமினோ

24. வியப்புச் சொல்லியமாக அமைவது
   1. ஆ! சுடுகிறதே!
   2. கதவைத் திற.
   3. கடுங்குளிர்
   4. வறுமை ஒழிக!

25. ஓர் இலக்கியத்தை நன்கு கற்று, அதன் உட்பொருளை நுணுக்கமாக ஆய்வது
   1. திறனாய்வு
   2. எடுத்துக்காட்டு
   3. ஆராய்ச்சி
   4. அறிக்கை

26. “கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே”. இதில் உரைத்தல் என்பது
   1. தொழிலாகுபெயர்
   2. பொருட்பெயர்
   3. வினையாலணையும்பெயர்
   4. தொழிற்பெயர்

27. உழைப்பாளிகளது உழைப்பைப் பறிப்போர்
   1. வழிகாட்டிகள்
   2. சுரண்டுவோர்
   3. கைகொடுப்போர்
   4. மதியாதார்

28. பரிதிமாற்கலைஞர் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய பணிகளுள் ஒன்று
   1. தனித்தமிழுக்கு வித்திட்டமை
   2. செம்மொழி என நிறுவியமை
   3. தமிழாராய்ச்சி மன்றத்தை உருவாக்கியமை
   4. உலக முதல் மொழி தமிழ் என நிறுவியமை

29. தாய்நாட்டுக்காக உயிரை ஈதல் உயரிய அறம். இதில் ஈதல் என்பதன் எதிர்ச்சொல்
   1. கொடுத்தல்
   2. ஏற்றல்
   3. இரங்கல்
   4. பகிர்தல்

30. சிங்கம் முழங்கும். அதுபோல யானை
   1. பிளிறும்
   2. கனைக்கும்
   3. கத்தும்
   4. உறுமும்

30x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. செம்மொழிகளாக அடையாளப்படுத்தப்பட்ட மொழிகளுள் நான்கினை எழுதுக.

___

___

2. ‘சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து’
இக்குறளினால் நீங்கள் விளங்குவது யாது?

___

___

3. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதிய கவிதைகளுள் இரண்டினை எழுதுக.

___

___

4. நாயக்கர் காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்கள் இரண்டு எழுதுக.

___

___

5. உயிர்த்தொடர், ஆய்தத்தொடர் குற்றியலுகரங்களுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.
உயிர்த்தொடர்க்குற்றியலுகரம்: ___
ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம்: ___

6. வினையாலணையும் பெயர் கொண்ட ஒரு சொல்லியம் எழுதுக.

___

___

7. பின்வருவனவற்றின் மாத்திரை அளவை எழுதுக.

உயிர்க்குறில்: ___ உயிர்மெய் நெடில்: ___

மெய்யெழுத்து: ___

5x2 = 10 **புள்ளிகள்**

## 3 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

அ. "முடிவென்று சோர்ந்திடாதே முயன்றிடு.." என்று தொடங்கி எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

ஆ. படத்துக்கான கவிதையை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



இ. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்லுவதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணங்கசச் செய்தல் வேண்டும்.

- மகாகவி பாரதியார்

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

தமிழ்ப்புலவர்கள் இயற்கைக்காட்சிகள், இயற்கை நிகழ்வுகள், அன்றாடச் செயற்பாடுகள் போன்றவற்றில் தமது கற்பனைத் திறனை ஏற்றி சொற்சுவையும் பொருட்செறிவும் நிறைந்த கவிதைகள் படைப்பதில் வல்லவர்கள். இன்று நாம் காணும் காட்சிகள், நிகழ்வுகளைப் படம் பிடிக்கின்றோம்; பதிவேற்றம் செய்கின்றோம். உலகின் ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறும் செய்திகளை உடனுக்குடன் காட்சிப்படமாகவே பார்க்கின்றோம். ஆனால் பண்டைக்காலத்தில் தொலைக்காட்சி, இணையம் போன்ற எவ்வகைத் தொழில்நுட்ப வாய்ப்புகளும் இருக்கவில்லை. அக்காலத்தில் தாம் கண்ட காட்சிகளை உள்ளவாறே சொற்களால் மட்டுமே பதிவு செய்யும் திறன் தமிழ்ப்புலவர்களிடம் இருந்தது. அக்காலத்தில் மக்கள் தேவையின் பொருட்டே பயணங்களை மேற்கொண்டனர். நானிலங்களுள் ஒரு நிலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள், அங்கு காணப்படும் கட்டடங்கள், பூக்கும் பூக்கள், வாழும் பறவைகள், அந்நில மக்களின் உடைகள், அணிகலன்கள், குணவியல்புகள் போன்றவற்றை ஏனைய நில மக்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன. தமிழ்ப்புலவர்கள் ஒரே நிலத்தில் தங்குபவர்கள் அல்லர். அவர்கள் ஊர்கள் தோறும் நடந்து செல்பவர்களாக விளங்கினர். அப்பொழுது தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பாடலாகப் பதிவு செய்வர். அத்துடன், அவற்றை வாய்மொழி மூலமாக ஏனையவர்களுக்குக் கொடுப்பர். அவ்வாறான பண்டைத் தமிழ்ப்பாடல்களிலிருந்தே நாம் எம் மூதாதையரது வாழ்வையும் வரலாற்றையும் அறிந்து கொள்கின்றோம்.

10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

**தமிழ்:**

தமிழ் எமது தாய்மொழி. அதுவே எமது அடையாளம். தாய்மொழி தெரியாதோர் தமது அடையாளத்தை இழக்கின்றனர். தாய்மொழிக்கல்வி ஒருவருக்கு தன்னம்பிக்கையையும் நல்ல பண்புகளையும் வழங்குகிறது. தாய்மொழியைக் கற்கும் மாணவர்கள் ஏனைய மொழிகளை விரைவாகக் கற்றுக்கொள்கின்றனர். தொழில் வாய்ப்புகளுக்கும் மேற்படிப்புகளுக்கும் தாய்மொழிக்கல்வி உதவுகிறது. புலம்பெயர்ந்து வாழும்நாடுகளிலே தாய்மொழியைக் கற்கும் தமிழ் மாணவர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளார்கள்.

**வாழிடமொழி:**

10 புள்ளிகள்

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழ் ஒரு செம்மொழி
2. இலக்கியத் திறனாய்வு
3. நீங்கள் வாழும் நாடு பற்றி வேறு நாட்டில் வாழும் நண்பருக்கு அஞ்சல்
4. இயற்கை வளங்களைப் பேணுவோம்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - இயற்கை வளங்களும் அவற்றின் பயன்களும்
   - அழிக்கப்படுவதற்கான காரணங்கள்
   - பேணுவதற்கான வழிகள்

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

தமிழீழத்தில் இருந்த கட்டுமானங்களுள் ஒன்று தமிழீழ வைப்பகம். 1994ஆம் ஆண்டு மே 23ஆம் நாள் தமிழீழ வைப்பகத்தின் முதற்கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது. "தமிழீழ வைப்பகம் தமிழரது காப்பகம்" என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு தமிழர் தாயகப் பகுதிகளில் பல கிளைகளை அமைத்து, 2009ஆம் ஆண்டு வரை சிறப்பாகச் செயற்பட்டது; 2024ஆம் ஆண்டு அதன் முப்பதாவது ஆண்டாகும்; நிலையான வைப்புகள், நடைமுறைக் கணக்குகள், குழந்தைகளுக்கான சேமிப்புகள், வெளிநாட்டு நாணயமாற்று, பொருண்மியக் கடன்கள் எனப் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, நேர்த்தியான சேவையை மக்களுக்கு வழங்கியது. தமிழ் மக்களது திட்டமிட்டு அழிக்கப்பட்ட பொருண்மிய இருப்பைக் கட்டியெழுப்புவதற்கும் இது உதவியது. காவலரோ, கண்காணிப்புக் கருவியோ வைத்திருக்காமல் ஈழத்தீவின் பாதுகாப்பு மிக்க வைப்பகமாகத் தமிழீழ வைப்பகம் திகழ்ந்தது. இதனை அனைத்துலகச் செய்தி நிறுவனமொன்று பதிவுசெய்திருந்தது.

1. தமிழீழ வைப்பகத்தின் முதற்கிளை எங்கு திறக்கப்பட்டது? — 1 புள்ளி

___________________________________

2. தமிழீழ வைப்பகத்தின் தொலைநோக்குச் சிந்தனை யாது? — 2 புள்ளிகள்

___________________________________

3. இது எதற்கு உதவியது? — 2 புள்ளிகள்

___________________________________

4. தமிழீழ வைப்பகம் தொடர்பான அனைத்துலகச் செய்தி நிறுவனத்தின் பதிவு யாது? — 2 புள்ளிகள

___________________________________

___________________________________

5. தமிழீழ வைப்பகம் மக்களுக்கு வழங்கிய திட்டங்களுள் இரண்டினை எழுதுக. — 2 புள்ளிகள்

___________________________________

___________________________________

9 புள்ளிகள்

2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து கோட்டில் எழுதுக.

(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)

## தலைப்புகள்:

தவணைமுறைக் கட்டணச் சலுகை
கட்டணக்கழிவில் விண்ணுந்துப் பயணச்சீட்டு
கனடா சுற்றுப்பயணம்
இருக்கைகளுக்கான முன்பதிவு

அ. ________________________________

2026ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ண காற்பந்தாட்டப் போட்டியின் இறுதிச்சுற்றினைப் பார்வையிடச் செல்வோருக்கு ஓர் அரிய வாய்ப்பு! எமது நிறுவனம் அவர்களுக்கு இருபது விழுக்காடு விண்ணுந்துக் கட்டணக் கழிவினை வழங்கவிருக்கிறது. இவ்விலைக்கழிவு யூன் 2025 வரை மட்டுமே! நீங்கள் முன்பதிவு செய்ய எமது இணையத்தளத்தினை நாடுங்கள்.

ஆ ________________________________

கனடாவில் நடைபெறும் 2026ஆம் ஆண்டு உலகக்கிண்ண காற்பந்தாட்டப் போட்டியினைப் பார்வையிடச் செல்லும் எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் விண்ணுந்துப் பயணச்சீட்டுக் கட்டணத்தைத் தவணை முறையில் செலுத்தும் அரிய வாய்ப்பினை வழங்குகிறோம். எமது பயணநிறுவனத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் வாடிக்கையாளராக இருப்பவர்களுக்கு மட்டுமே இச்சலுகை வழங்கப்படுகிறது.

இ ________________________________

மெக்சிக்கோவில் நடைபெறும் உலகக்கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டியின் இறுதிச்சுற்றினை மாபெரும் திரையில் பார்ப்பதற்கான வாய்ப்பினை புதிய தொழில்நுட்பங்களுடன் எமது திரையரங்கு வழங்குகிறது. அத்திரையரங்கில் ஐந்நூறு பார்வையாளர்களுக்கான இருக்கைகள் மட்டுமே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இருக்கைகளை முன்பதிவு செய்ய எமது இணையத்தளத்தை நாடுங்கள்.

3x2 = 6 புள்ளிகள்

## பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

### எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |

### வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |